கொரட்டியார் வகை பங்காளிகளின் பால் சிறப்பு, பொது படைப்பு விவரங்கள்


கொரட்டி அடைக்காத்தாள்


கொரட்டி கருப்பர்

வெளியீடு :

சா.நா.அ.அழ.சித.
சொக்கலிங்கம் - உமா

கொரட்டியார் வகை பங்காளிகளின் பால் சிறப்பு, பொது படைப்பு விவரங்கள்



அன்பளிப்பு :

அள.சித. சொக்கலிங்கம் செட்டியார் - உமா ஆச்சி

அவர்களின் மூத்த மகன்

டாக்டர். சிதம்பரம் - ருக்மணி (எ) பிரியா

திருமணத்தில் வெளியிடப்பட்டது

27.11.2009

30-5

படைப்பு முன்னுரை

ஆண்டுதோறும் தை மாதத்தில் கொரட்டியார் வகை பங்காளிகள் அனைவரும் ஒன்று கூடி கொரட்டி ஆலயத்தில் வழிபாடு செய்ய வேண்டிய விபரங்களையும், பொது படைப்பில் பள்ளயம் போடும் விபரங்களையும், அதற்கு வேண்டிய பொருள்களை சேகரிக்கும் விபரங்களையும் விரிவாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபரங்களை காலஞ்சென்ற திரு.மு.வெ. அண்ணாமலை செட்டியார் சுமார் 20 வருடங்களுக்கு முன் என் சகோதரர் திரு. சித. அருணாசலம் செட்டியாருக்கு தன் கைப்பட எழுதி கொடுத்து இருந்தார்கள்.

அதை ஆதாரமாக வைத்து கொண்டு இன்றைய நடைமுறைக்கு ஏற்ப மாற்றி கொடுத்த சா.சித.மெ.முத்துராமன் செட்டியார் அவர்களுக்கும், மு.வெ.அ.வெங்கிடாசலம் செட்டியார் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அள. சித. சொக்கலிங்கம்

கொறட்டியார் வகை பங்காளிகள் தை மாதத்தில் புதன்கிழமையில் கொறட்டிக்கு ஒன்று சேர்ந்து பால் சிறப்பு கொண்டு போகிற விபரமும், பொது படைப்பு படைக்கிற விபரமும்

தை மாதத்தில் முதல் 15 நாளைக்குள் வேளார் & வருஷக்காரர் வீட்டு தோது பார்த்து புதன்கிழமையன்று கொறட்டிக்கு போக வேணும். மேற்படிக்கு உரிய நாளை பங்காளிகள் தை மாத சங்கராந்தி அன்று விசாரிக்க வருபவர்களிடம் சொல்ல வேண்டும். மற்ற வெளியூரில் உள்ளவர்களுக்கும், தகவல் தெரிவிக்க செய்ய வேண்டும். தேதி சொல்பவர்கள் கொறட்டிக்கு போவது, பேழை எடுத்து வரும் நாள், நேரம், தெரிவிக்கச் செய்ய வேண்டியது.

கொறட்டியில் பால் சிறப்பு கொடுக்க விரும்புகிறவர்கள் :

பால் சிறப்பு 1க்கு ரூபாய் 250/- கொடுக்க வேணும். அய்யனார் அடைக்காத்தாள் கருப்பையாவிற்கு மாவிளக்கு வைக்க வேணும். அய்யனாருக்கு வைக்கும் மாவிளக்கை இலையில் வைத்து வேளாரிடம் கொடுத்து அவரையே ஏற்றி வைத்து எடுத்துக் கொள்ளச் சொல்ல வேண்டியது.

அடைக்காத்தாளுக்கு மண் சட்டி 1ல் பால், பழம், சர்க்கரை கரைத்து வைத்து விருப்பப்பட்டவர்களும், பிள்ளை பிறந்து கூட்டிச் செல்பவர்களும் வைக்கலாம்.

பிள்ளையார், தெண்டாயுதபாணி, அய்யனார், அடைக்காத்தாள் கருப்பையாவிற்கு அர்ச்சனை செய்ய வேண்டும். சிறப்பு கொடுப்பவர்கள் விருப்பப்பட்டால் அர்ச்சனை செய்யலாம்.

ஆலயத்துக்கு காலை 9 மணிக்கு வரவேணும். அபிஷேகம் முடிந்து அலங்காரம் ஆனதும், மாவிளக்கு வைக்கலாம். தீபாராதனை ஆனவுடன் அவரவர்கள் தனி அர்ச்சனை செய்து பின் ஏலம் போட வேணும். ஏலத்தில் எல்லோரும் கலந்து கொண்டு ஏலம் போட்டு முடிந்து வீட்டிற்கு செல்லும் முன் முன்னோடிக்கு ரூ. 1.50ம் சிதறு தேங்காய் 1ம் உடைத்து செல்ல வேண்டும்.

கொறட்டியில் மதிய உணவு, பொங்கலும் சாம்பாரும், இடைவேள்ள, காலை, மாலை, காபி & டீ, இரவு பூஜை சாப்பாடும் உண்டு.

முதல்நாள் பெரிய படைப்புக்கு

பேழைப் பெட்டியும், சாமி வீட்டுச்சாமான்களையும், முதல்நாளே முன் படைத்தவர்கள் வீட்டிலிருந்து பங்காளிகளைக் கூட்டிக் கொண்டு போய் எடுத்து வரவும். அதற்கு வேன் வாடகைக்கும் எடுத்துக் கொள்ள வேண்டியது.

1. பாச்சோறு செ.படி2க்கு குறையாமலும் தேவைக்கு தகுந்தாற்போலும் பொங்க வேணும். வேண்டிய அளவு நெல்குத்தி அரிசி எடுத்துக் கொள்ள வேண்டும். லைக்கு 2 தேங்காய் உடைத்து ஆண் பிள்ளைகள் நறுக்கி சாமி வீட்டினுள் வைத்திருப்பார்கள்.

30-5

2. வெண்சாதம், 2 தவலை வடிக்க வேணும். 1 தவலையில் சி. படி. 3ம் (புழுங்கலரிசி பொன்னி) 2வது தவலையில் சி.படி. 2ம் (புழுங்கலரிசி) வடிக்க வேணும்.

3. கத்திரிக்காய், வாழைக்காய் தேவைக்கேற்ப குழம்பு வைக்க வேணும்.

4. பாசிப்பருப்பு, 3 உழக்கு மசித்து வைக்க வேணும்.

5. வடை தேவைக்கு சுட வேண்டும்.

6. மஞ்சள், சீயக்காய் பள்ளயத்துக்கு வைக்க அரைத்து வைக்க வேணும்.

7. பாச்சோற்றுக்கு அரிசி பெ.படிக்கு 1 3/4 கிலோ வெல்லம் போட வேணும்.

8. பள்ளயத்துக்கு சர்க்கரை 100 கிராம், நெய் 1/2 உழக்கு வாங்கி வைக்க வேணும்.

9. குழம்புக்கு, வெந்தயம், சீரகம், பூண்டு, உப்பு, புளி, க. எண்ணை, மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் எடுத்து வைக்க வேணும்.

10. குழம்புக்கு மிளகாய் பொடி அரைக்க குண்டு மிளகாய் பெ. படி. 2, மல்லி 10 உழக்கு, து. பருப்பு 1 உழக்கு, பச்சரிசி 1 உழக்கு, சீரகம் 1/4 உழக்கு, மிளகு 1 கைப்பிடி, விரலிமஞ்சள் 2 துண்டு எல்லாவற்றையும், வறுத்து அரைத்து வைக்க வேண்டும்.

11. 1/2 உழக்கு சா. நெய் எடுத்து வைக்க வேணும்.

12. விளக்குக்கு பஞ்சுதிரி திரித்தும், அலங்கார தீபத்துக்கு நூல்திரியும் வேணும்.

பெரிய படைப்புக்கு வேண்டிய படைப்பு சாமான்களும் செய்யும் முறை விபரமும்

முதல்நாள் படைப்பு

படைக்கும் அறை சுத்தம் செய்து கழுவி, மொழுகி, கோமயம் தெளித்து பின் குத்து விளக்கு 2 முகம் நடுவீட்டில் ஏற்றி வைத்து அவரவர்கள் பழக்கப்படி கொப்புடையம்மன், முத்தாளம்மன், அய்யனார் கோயில்களுக்கு விதைப்பு நெல், கொடுத்து விபூதி குங்குமம் வாங்கி வந்து படைக்கும் வீட்டில் ஒரு தட்டில் வைக்க வேண்டும்.

முதல் நாள் படைப்பு அறையில் பள்ளயம் போட தயாராக இருக்க வேண்டிய பொருட்கள் :

சந்தனம் ரூ. 5/-, விபூதி குங்குமம், தேங்காய் 4, உபரிகாய் – 1, வாழைப்பழம் பள்ளயத்துக்கு 17, அர்ச்சனைக்கு 8, வெத்தலை பாக்கு, மஞ்சள், சீயக்காய் அரைத்தது, ந. எண்ணை 100 மிலி, பசுவநெய் 1/2 உழக்கு, சர்க்கரை

100 கி, எலுமிச்சை பழம் 9, மாம்பழம், சாத்துக்கட்டி, திராட்சை, ஆரஞ்சு, ஆப்பிள், மாதுளை, பிலாப்பழம், கரும்பு கிடைப்பது, பிரியப்பட்டதை தேவைக்கு வாங்க வேணும். தாட்டெலை – 4, நூட்டெலை – 3 அடுக்கு (நுனி இலையாக) விளக்குக்கு, எண்ணை அல்லது நெய், தீப்பெட்டி, சூடம், ஊதுபத்தி, சாம்பிராணி, மாலை, புஷ்பங்கள், பால் காய்ச்சி வைக்கவும். துடைக்க பழைய 8 முழ வேட்டி – 1, விபூதி மடிக்க பேப்பர்.

முதல் நாள் கொரட்டியில் தீர்த்தம் எடுத்து வர கொண்டு போக வேண்டிய பொருள்கள் :

கொரட்டிக்கு புறப்படும் போது படைப்பு அறையில் விளக்கு ஏற்றி இருக்க வேண்டும்.

திருமஞ்சனப்பொடி பாக்கெட் – 1, எலுமிச்சம்பழம் – 2, தேங்காய் 5, சிதறு தேங்காய் – 1, வாழைப்பழம் – 10, வெத்திலைப்பட்டியல் – 5, ஊதுபத்தி பாக்கெட் – 1, சூடப்பாக்கெட் – 1, சாம்பிராணி பாக்கெட் – 1, இளநீர் – 2, நெல் பெ. படி – 1, ப. அரிசி சி. படி – 1, 1 1/2 முள மாலை 3, கதம்பம் முளம் – 10, ந. எண்ணை 1/2 லிட் பால் 2 லிட், தயிர் 1 லிட், பன்னீர் பாட்டில் – 1, சந்தனம் 5 ரூ, முன்னோடிக்கு ரூ. 1.50ம், சொர்ண புஷ்பம் ரூ. 1ம் வேளாருக்கு சன்மானமும் கொடுக்க வேணும். கொரட்டியில் இருந்து அய்யனார், அபிஷேகதீர்த்தம், பன்னீர் பாட்டிலிலும் வெண்சாதம், அர்ச்சனை பிரசாதங்கள் கொண்டு வந்து விளக்கு ஏற்றி இருக்க பார்த்து படைப்பு வீட்டில் வைக்கவும்.

பேழை துவைத்து அருவாள்களையும், சுக்குமாத்தடியையம் அபிஷேகம் செய்து வைக்க வேண்டும்.

பேழை துவைக்க

கருப்பு நிறம் கலக்காத ஏக வேஷ்டி – 1, துண்டு – 1ம் கண்டாங்கி – 1ம், புதியதாக வாங்கியதுடன் முன் உள்ள வேட்டி கண்டாங்கிகளை எண்ணி பேழை துவைக்க வேணும். காயப்போட்ட கண்டாங்கி, வேஷ்டி துண்டுகளை மற்றவர்கள் தொடாதவாறும், காயப்போட்டதில் குறுக்கேயும் யாரும் போகாதவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். காய்ந்ததும் முன் எண்ணிக்கைப்படி சரி பார்த்து மடித்து கட்டி படைக்கும் வீட்டில் வைக்க வேணும். (புதிய கண்டாங்கி, வேஷ்டி, துண்டு பேழைப்பெட்டியில் அடியில் வைத்து மற்றவைகள் மேலே இருக்க வேணும்).

அருவாள் அபிஷேகத்துக்கு

ந. எண்ணை – 1/2 லிட்டர், பால் – 2 லிட்டர், இளநீர் – 4, திருமஞ்சனம் – 2 பாக்கெட், பெரிய பன்னீர் – 2 பாட்டில், சீயக்காய் தூள் – 200 கிராம்.

வெள்ளி அருவாள்களுக்கு பால் பன்னீர் அபிஷேகம் செய்து துடைத்து படைக்கும் வீட்டில் வைக்க வேணும்.

மற்ற அருவாள், சுக்குமாத்தடிகளுக்கு எண்ணை, சீயக்காய், திருமஞ்சனம், இளநீர், பால், பன்னீர், அபிஷேகம், செய்து அபிஷேகநீர் நன்றாக வடியவிட்டு படைக்கும் வீட்டில் வைக்க வேணும்.

பாச்சோத்துக்கு 2 தேங்காய் உடைத்து நறுக்கி படைப்பு வீட்டில் வைக்க வேணும். பேழை துவைத்தவர்களுக்கு சர்பத், மோர் கொடுக்க வேணும்.

அடைக்காத்தாள் பள்ளயம்

கிழக்கு முகமாக அடைக்காத்தாள் பள்ளயம் இருக்க வேணும். பேழையில் உள்ள விரிப்பை விரித்து கண்டாங்கிகளை வைத்து அதன் மேல் புதிய கண்டாங்கி வைத்து கழுத்தூரு, சுவாமி நகைகளையும் சாத்தி 2 எலுமிச்சம்பழத்தில் சந்தனம், குங்குமம் வைத்து புஷ்ப அலங்காரம் செய்ய வேணும். (கொ.அ.க. கழுத்துரு வைத்து படைத்தால் பள்ளயத்தில் ரூ. 51/- வைக்க வேண்டும்.)

அடைக்காத்தாள் பள்ளயத்துக்கு

வாழை இலை 4 போட்டு நடுவில் பாச்சோறு சதுரப்பட அல்லது வட்ட வடிவமாக வைத்து அதன்மேல் 4 வாழைப்பழம் வைத்து நடுவில் சர்க்கரை, பசுவநெய் விட்டு (முப்பழம்) இலையில் பழங்கள் பரப்பி வைக்க வேணும்.

அடைக்காத்தாள் பள்ளயத்துக்கு வலப்புறமாக கொறட்டி பிரசாதங்களை பரப்பி (தீர்த்தம், சாதம், காளாஞ்சி) பின் மஞ்சள் பிள்ளையார் 1 கிண்ணத்தில் தண்ணீர், மஞ்சள் உருண்டை 1 கிண்ணத்தில் ந. எண்ணை, சீயக்காய் உருண்டை இவை 3க்கும் 2 வெத்திலை, 1 பாக்கு வீதம் 3 பட்டியல் கட்டி பக்கத்தில் வைக்க வேண்டும்.

பள்ளயத்துக்கு 2 பக்கமும் 5 முக நிலை விளக்கு ஏற்றி வைக்க வேண்டும்.

கருப்பையா பள்ளயம்

கருப்பையா பள்ளயம் படைப்பு வீட்டு நிலை படிக்கு நேராக பேழையில் உள்ள விரிப்பை விரித்து பள்ளயம் 1க்கு 2 ஏக வேஷ்டியாக 13 பள்ளயம் வரிசையாக வைக்க வேணும். மிச்ச ஏக வேஷ்டிகளை பள்ளயதுக்கு நடுவே விரித்து (புதிய வேஷ்டி மேல் புறமாக வரவேண்டும்). 13 கிண்ணத்தில் 1ல் ந. எண்ணை 1ல் தண்ணீர் வீதமும் 13 செட் வெற்றிலை பாக்கும், 7 உருண்டை சீயக்காய், 6 உருண்டை மஞ்சள் வைக்க வேணும். கடைசியில் பிரம்பும் சாத்தி சுவாமிக்கு இடப்பக்கம் இரண்டு அருவாளும், நடுவில் வெள்ளி சுக்குமாத்தடியும், கடைசியில் சிறிது உயர அருவாளும் வைக்கவும்

நடுபள்ளயத்தில் சுக்கு மாத்தடியில் வெள்ளிக்குதிரை, கருப்பர் அங்கியை கட்டி சாத்தி வைத்து சுவாமிக்கு வலப்பக்கம், 2 அருவாள், 1சுக்குமாத்தடி, சாத்தி வைத்து மாலை புஷ்பங்கள், சந்தனம், குங்குமம் கச்சை சாத்த வேண்டும்.

ஷை பள்ளயத்துக்கு இருபுறமும் மிச்ச வெள்ளி அருவாள்களை நிற்க வைத்து அதன் கீழே சலங்கை மணி, சிலம்பு பரப்பி புஷ்பங்களை சாத்தவேணும்.

கருப்பர் பள்ளய இருபுற மூலையில் பெரிய அருவாள்களுக்கு விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு எலுமிச்சம்பழம் வைத்து புஷ்பம் கருங்கச்சை சாத்தி நிறுத்தி வைக்க வேணும்.

நிற்க வைத்துள்ள பள்ளய எல்லா அருவாள்களுக்கும் எலுமிச்சம் பழத்தில் சந்தனம், குங்குமம் இட்டு சொருகி வைக்க வேணும்.

மேற்படி பள்ளயம் 2லும் கொரட்டி தீர்த்தம், பன்னீர், சந்தனம் தெளித்து கருப்பர் பள்ளயத்தில் (ஆட்டு கிடாய்க்காக) ரூ. 17.50ம் வைக்க வேணும்.

அடைக்காத்தாள் பள்ளயத்துக்கு முன் விபூதி குங்குமம் சந்தனம் கிண்ணம் வைத்து தாம்பளத்தில் சந்தனம், குங்குமம், இட்டு சொர்ண புஷ்பத்துடன் வைக்க வேண்டும்.

இரண்டு பள்ளயத்துக்கு தலா 1 தேங்காய் உடைத்து பழம் வெத்திலை பாக்கு வைக்க வேணும்.

முதல் பள்ளயம் கை மணி அடித்து சாம்பிராணி தூபம் , அலங்கார தீபம்; 7 முக தீபம், 1 முக தீபம் காட்டி உடையவர்கள் மட்டும் சாமி கும்பிட வேண்டும்.

மறு பள்ளயம்

13 பள்ளயத்துக்கு 13 இலை போட்டு வெண்சாதம், பருப்பு நெய் இட்டு கத்திரிக்காய், வாழைக்காய் வைத்து, வடையும், பழ வகைகளையும், வைக்க வேணும். கருப்பருக்கு 21 வடை உள்ள வடைமாலை சாத்த வேணும்.

ஒரு தேங்காய் உடைத்து பழம் வெத்திலை பாக்கு வைத்து நிவேத்தியம் செய்து 15 கிளை மணியும் அடித்து, 7 முக தீபம், 1 முக தீபம் காட்டி எல்லோரும் சாமி கும்பிட வேண்டும்.

எல்லோரும் கும்பிட்ட பின், பள்ளய இலைகளை சிறிது நகட்டி விட்டு 1 தேங்காய் உடைத்து பழம் வெத்திலை பாக்கு வைத்து 1 முக தீபம் காட்டி உடையவர்கள் ஆண், மட்டும் கும்பிட வேண்டும்.

பின் அடைக்காத்தாள் பள்ளயத்தில் வைத்து படைத்த களுத்துருவை எடுத்து களுத்துருக்கு உடையவர்கள் கிழக்கு முகமாக நின்று கட்டிக் கொண்டு எல்லோரிடமும் ஆசீர்வாதம் வாங்க வேண்டியது.

பள்ளயம் பிரித்து சுவாமி நகைகள் வெள்ளி அருவாள்களையும் சரிபார்த்து வாங்கி பெட்டகத்தில் வைக்க வேணும். புஷ்பங்களை படைப்பு வீட்டுக்குள்ளேயே வைத்து மறுநாள் காலையில் பெண் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும்.

எல்லோருக்கும் பள்ளய பிரசாதம் விநியோகித்து எல்லோரையும் சாப்பிட சொல்ல வேண்டியது. மேற்படி இலையில் பாச்சோறு, பழவகைகள், பருப்பு, கத்திரிக்காய், வாழைக்காய் குழம்புகள் (உப்பு சரிபார்த்து) வடையையும் பரிமாற வேண்டும்.

எல்லோரும் சாப்பிட்ட பின்னர் படைத்த வீட்டில் நிலை விளக்கில் 1 முகம் மட்டும் ஏற்றி இருக்க செய்து, படைத்த வீட்டை திருக்காப்பு இட வேண்டும். மறுநாள் காலை நிலம் தெளியும் முன் படைத்த இலை, தீர்த்த பிரசாதங்கள் சாப்பிட்ட இலைகளையும் சேமம் சேர்க்க வேண்டும்.

திருக்காப்பு இட்டபின் மீண்டும் கதவை இரவு திறக்கக்கூடாது.

இரண்டாம் நாள் நொண்டிக்கருப்பையா படைப்பு

முதல்நாள் போலவே வீடு சுத்தம் செய்து கழுவி, மெழுகி பின் கோமயம் தெளித்தும், சாமி வீட்டு சாமான்கள் விளக்கியும் வைக்க வேணும்.

இலங்குடியில் தீர்த்தம் எடுத்து வர கொண்டு போக வேண்டிய பொருட்கள் :

இலங்குடி புறப்படும் முன் படைப்பு வீட்டில் நிலை விளக்கு ஏற்றி இருக்க வேணும்.

திருமஞ்சன பவுடர் - 1 டப்பா, எலுமிச்சம்பழம் - 2, தேங்காய் - 3, சிதறு தேங்காய் - 1, வாழைப்பழம் - 6, வெத்திலைப்பட்டியல் - 3, கதம்பம் முளம் - 10, 1 1/2 முள மாலை - 2, ஊதுபத்தி பாக்கெட் - 1, சூடம் - 1 பாக்கெட், சாம்பிராணி - 1 பாக்கெட், இளநீர் - 2, பன்னீர் பாட்டில் - 1, நெல் பெ. படி - 1, ப. அரிசி சி.படி - 1, ந. எண்ணை - 1/2 லிட், பால் - 2 லிட்டர், தயிர் - 1 லிட்டர்

முன்னோடிக்கும், மேடைக்காளிக்கும் - (1.50 + 6.50), சொர்ணபுஷ்டம் ரூ. 1.25ம் வேளாருக்கு சன்மானம் கொடுக்க வேண்டும்.

இலங்குடியில் இருந்து அய்யனார் அபிஷேக தீர்த்தம், வெண்சாதம், அர்ச்சனை பிரசாதம் கொண்டு வந்து படைப்பு வீட்டில் விளக்கு ஏற்றி இருக்கச் செய்து பிரசாதத்தை படைப்பு வீட்டில் வைக்க வேணும்.

பேழை துவைக்க

கருப்பு நிறம் கலக்காத புதிய ஏக வேஷ்டி ஒன்று வாங்கியும் முன் பேழையில் உள்ள வேஷ்டிகளையும் சேர்த்து எண்ணி துவைத்து காய வைத்து மடித்து புதிய

வேஷ்ட்டியை பேழையின் அடியில் வைத்து மற்றவைகளை மேலே வைத்து கட்டி படைப்பு வீட்டினுள் வைக்க வேணும்.

அருவாள் அபிஷேகம் செய்ய

அருவாள் அபிஷேகத்துக்கு முதல்நாள் படைப்பன்று உள்ளது. போலவே அபிஷேக சாமான்கள் தயாராக வைத்து வாள் கழுவி படைப்பு வீட்டினுள் வைக்க வேண்டியது.

நொண்டிக்கருப்பையா படைப்பு

கருப்பட்டி பணியாரத்துக்கும் முதல்நாளே 2 கூடையில் ப. அரிசி அளந்து வைக்க வேணும். நடப்பு பெ.படி 20 (10 மரக்கால்) தேவைக்கு தகுந்தாற்போலும் போடலாம். பெ. படி 2, படைப்பு வீட்டினுள் சுடுவதற்கு முதலில் அளந்தும் அதை முதலில் பங்காளி பெண் பிள்ளைகளே இடித்து படைப்பு வீட்டினுள் வைத்துவிட வேண்டும். மற்ற அரிசியை அக்காக்கள் இடிக்கலாம். மேற்படியார்களுக்கு முன்கூட்டியே சொல்லி வர ஏற்பாடு செய்ய வேண்டும். நாம் மாவு சலித்துக் கொடுக்க வேணும். மதியம் 1 மணிக்குள் மாவு கரைத்து காலை 10 மணிக்கு மேல் வெங்காயம் உரித்தும், கத்திரிக்காய் 2 கிலோவும், 16 வாழைக்காய்களையும், நறுக்கி வைக்க வேணும். 1 படி அரிசிக்கு கருப்பட்டி 1கிலோவும், 1 அச்சு வெல்லமும் எடுத்துக் தட்டி வைத்து கிலோ 1க்கு 1 டம்ளர் தண்ணீர் வீதம் ஊற்றி பாகு காய்ச்ச வேணும். கருப்பட்டி கரைந்து கொதித்ததும், வடிகட்டி ஆற வைத்து மாவைக்கொட்டி கரைத்து வைக்க வேணும். மதியம் சாப்பிட்டபின், பங்காளி வீட்டு பெண்களில் பெரியவர்கள் படைக்கின்ற வீட்டிற்குள் பணியாரம் ஊற்றி தாம்பளத்தில் எடுத்து, படைப்பு வீட்டிற்குள்ளே வைத்தும் வளவு, வாசல்களில் மற்ற பணியாரங்களை ஊற்றி வேறு தனி அறையில் பாய்விரித்து அதில் காற்றாட அடுக்கி வைக்க வேணும். உளுந்தவடை (பெ.படி 1) சுட வேணும். வெண்சாதம் தவலையில் புளுங்கல் அரிசி பெ. படி 1 1/2 வடித்தும், பா. பருப்பு 3 உழக்கு மசித்தும், வைக்க வேணும். இன்று அதிகாலையில் தயிருக்கு நம் வீட்டு பெண்களே 1 உழக்கு பால் காய்ச்சி உறை ஊற்றியும் பள்ளயத்துக்கு மஞ்சள், சீயக்காயும் அரைத்து சாமி வீட்டினுள் வைக்க வேணும்.

பணியாரச்சட்டிகள் இறக்கியதும் பள்ளயம் போட வேணும்.

படைப்பு அறையில் பள்ளயம் போட தயாராக இருக்க வேண்டிய பொருட்கள்:

சந்தனம் ரூ. 5/- தேங்காய் 3, உபரிதேங்காய் - 1, வாழைப்பழம்11, அர்ச்சனைக்கு 6, வெத்தலை பாக்கு மஞ்சள், சீயக்காய் அரைத்தது, எலுமிச்சை பழம் 7, தயிர் உரை ஊற்றி வைக்க வேணும். 2 சுருட்டு, தாட்டெலை - 4, நாட்டெலை - 2 அடுக்கு, ந. எண்ணை 100 மில்லி, பழ வகைகள், மாலை, புஷ்பங்கள் முதல் நாள் போலவே மற்றவைகள் இருக்க வேணும்.

பள்ளயம் போட வேண்டிய விபரம்

கிழக்கு முகமாக நொண்டிக்கருப்பையா பள்ளயம் போட வேணும். நிலைப்படிக்கு நேராக பெரிய விரிப்பை விரித்து 2 வேஷ்டிகள் வீதம் 7 பள்ளயம் வைத்து மிச்ச ஏக வேஷ்டிகளை, விரிப்பு, விரித்து நொண்டி கருப்பையா பள்ளயத்தில் விரித்து வைத்து ஏக வேஷ்டி புதியது மேல்புறமாக இருக்க வேணும். நடுவில், மர சுக்குமாத்தடியில் வெள்ளிக்குதிரை, நொண்டிக்கருப்பர் அங்கி கட்டி, முதல்நாள் கருப்பர் பள்ளயம் போல அருவாள் சுக்குமாத்தடி வைத்து அலங்காரம் செய்ய வேண்டும்.

கிடாய்க்கு ரூ. 17.50 பள்ளயத்தில் வைக்க வேணும். முதல் நாள் அடைக்காத்தாள் பள்ளயத்துக்கு பக்கத்தில் வைத்தது போல் இலங்குடி பிரசாதம் ந. எண்ணை, தண்ணீர், மஞ்சள் பிள்ளையார், மஞ்சள் உருண்டை, சீயக்காய் உருண்டை, வெத்திலை பட்டியல்கள் நிலை விளக்குகள் ஏற்றி வைக்க வேணும். 2 சுருட்டும் வைக்க வேணும்.

இலங்குடி விபூதி, குங்குமத்தையும் முன் நாள் இருப்பு விபூதி, குங்குமத்தட்டில் கலந்து வைக்க வேணும்.

7 பள்ளயத்தின் மேல் அருவாள், சலங்கை மணி, சிலம்பு, வெள்ளி அருவாள்களையும், பரப்பி வைத்து, புஷ்பம் சாத்தி 2 மூலையிலும் பெரிய அருவாள் சாத்தி விபூதி, குங்குமம், சந்தனம், புஷ்பம் சாத்த வேணும்.

நிறுத்தி வைத்துள்ள அருவாள்கள் அனைத்துக்கும், எலுமிச்சம்பழத்தில் சந்தனம், குங்குமம் வைத்து சொருகி வைக்க வேண்டும்.

7 பள்ளயத்துக்கு 4 கிண்ணத்தில் தண்ணீர், 3 கிண்ணத்தில் ந. எண்ணை சிறிது ஊற்றி தண்ணீர், எண்ணை மாற்றி மாற்றியும், மஞ்சள் உருண்டை, சீயக்காய், வெத்திலை பட்டியல்கள் பக்கத்தில் வைக்க வேண்டும்.

கருப்பர் பள்ளயத்தின் முன் தாம்பளத்தில் சந்தனம் குங்குமம் வைத்து சொர்ண புஷ்பம் வைக்க வேணும்.

பள்ளயத்தில் தீர்த்தம், பன்னீர், சந்தனம் தெளிக்க வேணும்.

முதல் பள்ளயம்

1 தேங்காய் உடைத்து பழம், வெத்திலை பாக்கு வைத்து கை மணி அடித்து, சாம்பிராணி தூபம், அலங்கார தீபம் 7 கிளை தீபம், 1 முக தீபம் காண்பித்து உடையவர்கள் மட்டும் சாமி கும்பிட வேண்டியது.

2வது பள்ளயம்

கருப்பர் பள்ளயத்தின் முன் 4 இலை போட்டு வெண்சாதம் சதுரப்பட அல்லது வட்ட வடிவமாக வைத்து, பருப்பு, நெய், தயிர் இட்டு, 4 வாழைப்பழம், சதுரப்பட வைத்து, சர்க்கரையும் இட வேண்டும். கத்திரிக்காய், வாழைக்காய், சுவாமி வீட்டினுள் சுட்ட கருப்பட்டி பணியாரத்தை படைத்து பழ வகைகளை பரப்ப வேண்டும்.

கருப்பருக்கு 21 வடை உள்ள வடை மாலை சாத்த வேணும்.

7 பள்ளயத்துக்கு 7 இலைகள் போட்டு பணியாரம் தவிர மற்ற படையல் சாமான்களுடன் வடையும், சேர்த்து படைக்க வேண்டும்.

1 தேங்காய் உடைத்து பழம் வெத்திலை பாக்கு வைத்து நெய்வேத்தியம் செய்து, பெரிய கிளை மணியும் அடித்து, 7 முக தீபம், 1 முக தீபம் காட்டி அனைவரும் சாமி கும்பிட வேண்டும்.

எல்லோரும் சாமி கும்பிட்ட பின் இலைகளை சற்று நகர்த்தி விட்டு 1 தேங்காய் உடைத்து வெத்திலை பாக்கு பழம் வைத்து 1 முக தீபம் காட்டி உடையவர்கள் மட்டும் சாமி கும்பிட வேண்டியது. பின்பு

கருப்பர் பாட்டு பாடி, சாமி அழைத்து, படைப்பு ஒப்புக் கொண்டதற்குள்ள விபூதி வாங்கிக் கொள்ள வேணும். பின்பு பள்ளயத்தை பிரித்து, பேழையைக் கட்டி அருவாள், சுக்குமாத்தடி எல்லாம் எடுத்தபடி வைக்க வேண்டும். படைத்த வடைமாலை, பணியாரம், பழங்கள், பிரசாதம் அனைத்தும் பங்காளி ஆண் பிள்ளைகள் மட்டும் சாப்பிட வேணும். மற்றவர்கள் அனைவருக்கும் தனி அறையில் உள்ள பணியாரம் எடுத்து சிறிதும், மற்ற பழம், பருப்பு, சாதம், குழம்பு, வகைகள் எல்லோருக்கும் இலையில் பறிமாறி சாப்பிடச் சொல்ல வேண்டும்.

படைத்த தேங்காய் பழம், பூக்களையும், அர்ச்சனை பிரசாதம் சாப்பிட்ட இலைகள் அனைத்தும் சேமம் சேர்க்க வேணும். படைப்பு வீடு திருக்காப்பிடுவது மீண்டும் திறப்பது முதல் நாள் படைப்புக்கு உள்ளதுபடி செய்ய வேணும். தனது படைப்புக்காரர்கள் மறுநாள் பேழைகளை காயப்போட்டு கட்டி வைக்கவும் வேண்டும்.

பங்காளி தவிர பிராத்தனை படைப்பு படைக்கும் மற்றவர்களுக்கு மறுநாள் படைத்த பிரசாதம், தேங்காய் பழம் வெத்திலை பாக்கு கொடுக்கக்கூடாது. முதல் நாள் படைப்பின் போதே கொடுத்து விட வேண்டும். மறுநாள் படைப்புக்கு விபூதி குங்குமம் மட்டுமே கொடுக்க வேண்டும்.

முதல் நாள் படைப்பு 2ஆம் நாள் படைப்பு முடிந்ததும், பள்ளயம் பிரித்து படைப்பு வீட்டுக்குள்ளேயே படைக்க கொடுத்த நகைகளையும், வெள்ளிச்சாமான்களையும் ஒத்துப் பார்த்து வாங்கி வைக்க வேண்டும். அருவாள், சுக்குமாத்தடிகளை மரப்பெட்டகத்தில் வைத்துவிட வேணும்.

தனிப்படைப்புக்காரர்கள் முதல் நாள், மறுநாள் பள்ளயவரவு ரூபாய்களை எண்ணிகுறித்து வைத்துக் கொண்டு, பொதுப்படைப்பின் போது ஷை ரூபாய்க்கு 2 வட்டியும் சேர்த்து கொடுக்க வேண்டும். பேழை துவைத்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சர்பத், மோர் கலந்து கொடுக்க வேணும்.

தனிப்படைப்பிற்கு முதல்நாள் மதியம் முதல் மறுநாள் படைப்பு வரை பங்காளிகளுக்கும் உறவினர்களுக்கும் உணவு மற்ற ஏற்பாடுகளையும் 3ம் நாள் காலை பணியாரம் பிரித்து வாங்கி செல்பவர்களுக்கும் காபி, சர்பத் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொது படைப்பிற்கு முதல் நாள் காலை முதல் மூன்றாம் நாள் மதியம் வரை உணவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மூன்றாம் நாள் காலையில் பணியாரம் பிரித்து பின் ஏலம் முடிந்து சாப்பிட்டு சொல்லிக் கொள்வார்கள்.

3ம் நாள் காலை 2 நாள் பேழைகளையும் காயப்போட்டு தேவைக்குள்ளதை வைத்து ஏலத்து உரிய சேலைகள், வேஷ்டி, கருங்கச்சைகளை எடுத்து கொண்டு பேழையை கட்டி வைக்க வேணும்.

கொரட்டியல் ஏலத்துக்கு மஞ்சள் தேங்காய் ஆரஞ்சு, சாத்துக்கட்டி, எலுமிச்சம்பழம், வாழைப்பழம், சர்க்கரையும் பொதுப் படைப்பில் 3ம் நாள் காலையிலும் ஏலம் போடுவார்கள்.

முதல் நாள் படைப்பிற்கு அடைக்காத்தாள் பள்ளயத்துக்கு குறைந்தது 16 கண்டாங்கிகளும், கருப்பையா பள்ளயத்துக்கு குறைந்தது 33 வேஷ்டிகளும், கருங்கச்சை 5ம் வைத்தும், மறுநாள் படைப்பிற்கு குறைந்தது 21 வேஷ்டியும், கச்சை 5ம் வைத்தும், மற்ற சீலை, வேஷ்டிகளை ஏலம் போட எடுத்துக் கொள்ளலாம்.

குறிப்பு :

நடப்பு பொதுப்படைப்பிற்கு புள்ளி 1க்கு ரூ. 50/-ம், அரிசிக்கு ரூ. 50/-ம் சுவாமி பணம் வைத்திருப்பவர்கள் 12% வீதம் வட்டியும் கொடுக்க வேணும்.

படைப்பில் பங்காளிகளை தவிர மற்றவர்கள் சேலை, வேஷ்டி, நகைகள் வைப்பவர்களுக்கு 2 பணியாரம் வீதம் கொடுக்கவும். படைப்பு படைக்க நன்மையான தீட்டுக்கு 7 நாட்களும், தின்மைக்கு 11 நாட்களும் கழித்து வைத்துக் கொள்ளலாம்.


கொரட்டி
பூரணா தேவி, ஆறடிசாத்த அய்யனார், புஷ்கலாதேவி

